★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: பங்குனி 7உ செவ்வாய் (20—3—56) ★ ★ வெளியூர்: பங்குனி 8உ புதன் (21—3—56) [இதழ் 237

ஜவ்வரிசி ஏற்றுமதிக்கு தாராள அனுமதி

மரவள்ளிக் கிழங்கிலிருந்து தயாரிக்கப்படும் ஜவ்வரிசியை சென்னை, திரு-கொச்சி மாநிலங்களில் உள்ள எல்லாத் துறை முகங்களிலிருந்தும் ஏற்றுமதி செய்ய தாராளமாக அனுமதி வழங்க முடிவாகியிருக்கிறதாம்.

1956 ஜூன் திங்கள் இறுதிவரை அனுமதி கிடைக்கும் என்றும், ஒருவர் 250 டன் வரை அதிகபட்சமாக ஏற்றுமதி செய்யலாம் எனவும் கூறப்படுகிறது.

தாய்நாட்டில் வாழ்வு தருவதற்கு வழிவகையறியாத சர்க்கார்

தமிழர்களை அந்தமானுக்கு 'ஏற்றுமதி' செய்கிறது

விவசாயத்திற்கு நிலமும், பணமும் தருவதாக சென்னை சர்க்கார் ஆசை காட்டுகிறது!

தாயகத்தில் வாழ்வுபெற வழியின்றி தமிழ் மக்கள் ஏற்கனவே மலாயா, சிங்கப்பூர், இலங்கை, ஆப்பிரிக்கா என்று பல்வேறு நாடுகளுக்கும் வயிற்றுப் பிழைப்பிற்காகக் கூலிகளாக ஓடிச்சென்று, அங்கே அவதி பலவற்றிற்கு ஆளாகித் தவித்துக்கொண்டிருக்கிருர்கள்.

வயிற்றுப் பிழைப்பிற்காக வேற்று நாடுகளுக்குச் செல்லுமாறு துரத்துகிற அவல நிலை, இன்னும் தமிழகத்திலிருந்து மறையவில்லை—மாறவில்லை.

தாயகத்தில் அவர்களுக்கு வாழ்வு தரவேண்டிய பெரும் பொறுப்புடைய சர்க்காரே, தமிழ் மக்களை அந்தமானுக்கு ஏற்றுமதி செய்யும் வேலையில் ஈடபட்டிருக்கிருர்கள்.

அந்தமான் தீவுகளை வளப்படுத்த வேண்டுமாம். டில்லி திட்டம் தீட்டுகிறது. அந்த வேலைக்குத் தமிழ் மக்களைப் பிடித்துத் தருமாறு சென்னை சர்க்காரைக் கேட்டிருக்கிறது டில்லி. சென்னை சர்க்காரும், ஆள் பிடித்துத்தர ஆசை வார்த்தைகள் கூறி அறிக்கை விடும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

★

சென்னை, மார்ச் 19—

அந்தமான், நிக்கோபார் தீவுகளில், சென்னை மாநிலத்தைச் சேர்ந்த 60 விவசாயக் குடும்பங்கள் குடியேற்றப்படுவார்களாம்.

டெல்லி சர்க்கார் அந்தத் தீவுகளின் அபிவிருத்திக்காகத் தயாரித்துள்ள ஒரு ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 1956—57-ம் ஆண்டில் தமிழ்நாட்டுக் குடும்பங்கள் அங்கு குடியேற்றப்படுமாம்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் பயிரிடுவதற்குத் தகுதியான 5 ஏகரா நிலமும், வீடு கட்டிக்கொள்ளவும் தோட்டம் பயிரிடவுமாக செப்பனிடப்படாத மேட்டு நிலம் 5 ஏகரும் தரப்படுமாம்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் வீடு கட்ட ரூ. 800; உழவு மாடு, ஏர், கலப்பை வாங்க ரூ. 700; பாத்திரங்கள் வாங்க ரூ. 130; எரு, விதை வாங்க ரூ. 100—ஆக ரூ. 1,700 கடன் தரப்படுமாம். இந்தக் கடனைத் திருப்பிக் கொடுத்து விட வேண்டுமாம்.

இதைத்தவிர வாழ்க்கைச் செலவுகளுக்காக முதல் ஆண்டில் மாதம் ரூ 70 வீதம் 8 மாதங்களுக்கும் இரண்டாம் ஆண்டில் நான்கு மாதங்களுக்கும்(மொத்தம் ரூ. 840) இலவசமாகத் தரப்படுவதுடன், பிரயாணச் செலவுகளுக்காக ரூ. 210 கடனும் தரப்படுமாம்.

அந்தமான் போய் குடியேற விரும்புபவர்கள், சென்னைக்கு வரும்படி கோரப்படுவார்கள் என்றும், விரும்புபவர்கள் மாவட்ட அதிகாரிகளுக்கு எழுதி மேல் விவரங்கள் தெரிந்துகொள்ளலாம் என்றும் சர்க்கார் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றனர்.

உண்மையான விவசாயிகள்தான் அங்கு அனுப்பப்படுவார்கள் என்றும், ஏதேனும் வேலை கிடைக்காதா என்று அலைபவர்கள், பெரும் குடும்ப பாரம் உடையவர்கள் எல்லாம் அந்தமானுக்கு அனுப்பப்பட மாட்டார்கள் என்றும், நல்ல உடற்கட்டு உடைய இளம் தம்பதிகளே அங்கு அனுப்பப்படுவர் என்றும் அறிக்கை விளக்கம் தருகிறது.

காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்களுக்கு வாய்ப்பூட்டு!

எதிராக வாக்களிக்கும் உரிமை பறிக்கப்படுகிறது!

டெல்லியின் முடிவைத் திணிக்க ஏற்பாடு!

புதுடில்லி, மார்ச் 19—

மாநில புது அமைப்பு குறித்து டில்லி தயாரித்துள்ள மசோதாமீது மாநில சட்டசபைகள் விவாதம் நடத்தும்போது காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள், மசோதா மாற்றத்திற்கு எந்த வகையிலும் உதவ முடியாத வகையில், அவர்களுடைய உரிமை பறிக்கப்படுகிறது.

"தனியாக கட்சிக் கூட்டத்தில் வேண்டுமானல் கருத்தறிவிக்கலாமே தவிர, மசோதாவில் மாற்றம் கோரி, சட்டசபையில் வாக்களிக்க அனுமதியளிக்கப்பட மாட்டார்கள்,"

என்று, அகில இந்திய காங்கிரசின் 'பார்லிமெண்டரி போர்டு' நாளைய தினம் எல்லா காங்கிரஸ் சட்டசபையாளர்களுக்கும் தாக்கீது அனுப்பும் என்று தெரியவருகிறது.

செங்கோட்டையைப் பங்கு போடுவதில் தகராறு?

திரு-கொச்சி கேட்கும் அளவு தந்துவிட டெல்லி வற்புறுத்தல்?

திருவனந்தபுரம், மார்ச் 19—

செங்கோட்டையைப் பங்கு போட்டுக்கொள்ள கேரளத்தாருடன் சென்னை மந்திரிகள் செய்துகொண்டஒப்பந்தப்படி, கேரள சர்க்கார் ஒரு 'சர்வே' நடத்தினரல்லவா?

அந்த 'சர்வே' அறிக்கையே வெகு நியாயமானது என்று டெல்லி கருத்தறிவித்திருக்கிறதாம்.

யார் யாருக்கு எவ்வளவு என்று செங்கோட்டையைப் பங்கு போட்டுத் தர, ஒரு அதிகாரியை அனுப்புமாறு சென்னை சர்க்கார் டெல்லியைக் கோரினர்களாம்; அவர்களோ, இரு மாநில சர்க்கார்களுமே பேசி முடிவு செய்துகொள்ள வேண்டியிருக்க, நாங்கள் ஏன் இதில் இப்போது தலையிட வேண்டும்? திரு — கொச்சி சர்க்காரின் 'சர்வே' அறிக்கையே எதிர்பார்க்கிற நியாயத்தோடு கூடியதாக இருக்கிறது என்று பதிலிறுத்து விட்டார்களாம்.

திரு — கொச்சி 'சர்வே' அறிக்கையின் நகல் ஒன்று இப்போது சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாம்.

சென்னை சர்க்கார், வேறு ஒரு 'சர்வே' குழுவை செங்கோட்டைக்கு அனுப்ப ஏற்பாடு செய்வதாகவும் தெரிய வருகிறது.

தனி மாநிலமாக பம்பாய் நகர்

"இப்போதுகூட மராட்டியர்கள் தங்கள் விருப்பத்தைத் தெரிவிப்பார்களேயானல், பம்பாய்நகரை தனி மாநிலமாக்குவதில் இந்திய சர்க்காருக்குத் தடை ஏதும் கிடையாது,"

என்று, மௌலானு அபுல்கலாம் ஆசாத் தெரிவித்திருக்கிருராம்.

பாக்-இந்திய எல்லைத் தகராறுகள்

'யுத்தம் தொடுப்பதில்லை என்று ஒப்பந்தம் வேண்டும்'

பாகிஸ்தான் பிரதமர் முகமது அலி கருத்து

கராச்சி, மார்ச் 19—

"இந்தியாவிற்கும்—பாகிஸ்தானுக்குமிடையில் நல்லுறவும், சமாதானமும் நிலவுவதற்கு, 'தகராறுகளைத் தீர்ப்பதற்காக யுத்தம் தொடுக்கமாட்டோம்; பேச்சுவார்த்தைகள் மூலமாகவோ, பிறரிடம் முறையிட்டு நியாயம் பெறுவதின் மூலமாகவோ தகராறுகளைத் தீர்த்துக் கொள்ளுவோம்' என்று இரு சாராரும் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும்"

என்று, பாகிஸ்தான் பிரதமர் முகம்மது அலி பாக். மக்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

"'எல்லைத் தகராறுகளைத் தீர்த்துக்கொள்வதற்குப் பலாத்காரம் உபயோகிக்கக் கூடாதென தொடர்புடைய அதிகாரிகளுக்குத் தாங்கள் உத்தரவுபிறப்பிக்க வேண்டும்; இல்லாவிடின், இரு சாராரின் உறவுகளுக்கும் குந்தகம் ஏற்படும்' என்று நான், தனிப்பட்ட முறையில் பிரதமர் நேருவுக்குக் கடிதம் எழுதியுள்ளேன். பாகிஸ்தான் அதிகாரிகளுக்கு அத்தகு உத்தரவு பிறப்பிக்க நான் தயாராயிருக்கிறேன்"

என்றும் பிரதமர் முகம்மது அலி குறிப்பிட்டிருக்கிருர் எனத் தெரியவருகிறது.

குடியரசுத் தலைவர் பதவியில் பங்களா வாசம் செய்வதுதான் மிச்சமாம்!

அபுல் கலாம் ஆசாத் தரும் விளக்கம்

'இந்தியாவின் குடியரசுத் தலைவராக அமருவதற்கு விரும்புவீர்களா?'

என்று இந்தியப் பேரரசின் கல்வி மந்திரி மௌலானு அபுல் கலாம் ஆசாத் அவர்களை ஒரு நிருபர் கேட்டாராம்.

'அந்த உத்தியோகத்தில் அமர்ந்துகொண்டு நான் முழுதும் நான் என்ன வேலை செய்ய முடியும்? வேண்டுமானுல் ரம்மியமான ஒரு பங்களாவும், அழகான ஒரு பூந்தோட்டமும் கிடைக்கும்; அவ்வளவுதானே!'

என்று பதிலிறுத்தாராம், ஆசாத்—ஏதோ, அந்தப் பதவிக்கு ஆசையே கொள்ளாத முற்றுந் துறந்த முனிவர் போல!

'குடியரசுத் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டால் என்ன செய்வீர்கள்?' என்று நிருபர்கள் கேட்டனராம்.

ஆசாத் பதில் கூறவில்லையாம்.

'டாக்டர் இராசேந்திர பிரசாத் தொடர்ந்து குடியரசுத் தலைவராக இருப்பதில்லை என்று முடிவு செய்துவிட்டாரா?' என்று கேட்டபோது, 'முடிவேதும் எடுக்கப்படவில்லை' என்று கூறினுராம், ஆசாத்!

வேலை தேடித் தரும் நிறுவனங்கள்

மாநில சர்க்கார் தலையில் கட்ட டில்லி முடிவு

"பல்வேறு மாநிலங்களிலும் உள்ள வேலை தேடித்தரும் நிறுவனங்கள் அடுத்த மார்ச் 31-ந் தேதியிலிருந்து மாநில சர்க்காரின் நிர்வாகங்களின்கீழ் ஒப்படைக்கப்பட்டுவிடும்"

என்று, டெல்லி சர்க்கார் தொழிலாளர் இலாகா உதவி மந்திரி அபீத் அலி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிருராம்.

கொச்சித் துறைமுக அபிவிருத்திக்கு ரூ 8,60,80 000 செலவாகக் கூடிய திட்டங்களும், ஆலப்புழை துறைமுக அபிவிருத்திக்கு ரூ 7-இலட்சம் செலவாகக்கூடிய திட்டங்களும் இடம்பெற்றுள்ளதாம்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 20—3—'56 செவ்வாய்

வீண் வாக்குறுதிகள்!

இந்திய அரசியல் சட்டத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டு[illegible] பதினன்கு தேசிய மொ[illegible]ருள் இந்தியும் ஒன்றாகும். [illegible]புக் கொள்ளப்பட்டுள்ளதில்[illegible], பதினன்கு மொழிகளு[illegible] சமத்துவம் இருக்கிறதே [illegible]லாது, செயல்பூர்வமாகக் கரு[illegible]தும்பொழுது, மற்ற மொழிகளுக்கு இல்லாத ஏற்றம் இந்திக்குத் தரப்பட்டு இருக்கிறது. இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாகும் பேறு, மற்ற மொழிகளுக்கு இல்லாத நிலையில், இந்தி மொழிக்குக் கிடைத்திருப்பதே, அந்த ஏற்றத்திற்குரிய அடிப்படைக் காரணமாகும்.

இந்தி மொழியை எவர்மீதும் வலுவில் திணிக்கப்படமாட்டாது என்ற வாக்குறுதியைக் குடியரசுத் தலைவரும், இந்தியப் பிரதமரும் வாய்ப்பு நேருகின்றபொழுதெல்லாம் அளித்து வருகிருர்கள். அதிலும் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டில்லாத தென்னுட்டு மக்கள்மீது கண்டிப்பாக அம்மொழி வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படமாட்டாது என்று அவர்கள் அடிக்கடி, சமாதானம் கூறிவருகிருர்கள்.

ஆனல் அவர்கள் வாக்குறுதி, நம்பிக்கை ஏற்படுத்துவதாக இல்லை. அவர்களுடைய வாக்குறுதிகள் வெறும் சொற்குவியலாகும் என உறுதி செய்வது போல், இந்தியப் பேரரசின் நடைமுறை இருக்கிறது.

இந்தி மொழியை எந்தெந்தத் துறைகளில், எந்தெந்தவகையில் புகுத்துவது என்பதை ஆராய்ந்தறிந்து ஒரு உருவான செயல் திட்டத்தை வகுத்துத் தருவதற்காக, பி. ஜி. கேர் தலைமையில் ஒரு இந்தி மொழி ஆய்வுக் குழு இந்தியப் பேரரசால் ஆக்கப்பட்டு இருக்கிறது. அக்குழுவும், இந்தியத் துணைக்கண்டம் முழுதும் 'சுற்றிக் கருத்தறிந்து வருகிறது. அதன் இறுதி வேலைத் திட்டம் இன்னும் ஐந்தாறு திங்களில் கிடைத்துவிடக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டாயமான இந்தித் திணிப்பு கண்டிப்பாக இருக்காது என்று குடியரசுத் தலைவராலும், இந்தியப் பிரதமராலும் அடிக்கடி தரப்பட்டுவந்த வாக்குறுதிகள் ஒருபக்கம் கிடக்கட்டும். அவ்வாக்குறுதிகள் வெறும் கண்துடைப்பாக இருந்தாலும் இருக்கக்கூடும்; அல்லது நிறைவேற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் தரப்பட்டதாக இருந்தாலும் இருக்கக்கூடும்.

ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற அரசியல்வாதிகளால் தரப்படுகின்ற வாக்குறுதிகளுக்கு, சட்ட உருவம் தரப்பட்டால் ஒழிய, அதை மக்கள் நம்பிக் கிடப்பதில் பொருளே கிடையாது. சட்ட முகம் பெற்றுள்ளவைகூட, இந்தியப் பிரதமர் நேருவின் ஆட்சியில் செல்லாக் காசு அளவுக்குள்ள மதிப்புக்கூட இல்லாது தொலைந்து போகிறது என்றுல், வெறும் வாக்குறுதிகளுக்கு மதிப்பு ஏது? மாற்றுத்தான் ஏது?

இந்தி மொழி பற்றி ஆராய்ந்து அறிய நியமிக்கப்பட்ட குழு, இன்னும் ஆராயும் கட்டத்திலேயே இருந்து வருகிறது. இறுதியான ஏற்பாட்டை அது இன்னும் உருவாக்கவில்லை. அதன் முடிவான ஏற்பாட்டை ஒரு அடிப்படையாக வைத்துக்கொண்டு, இந்தி மொழி செயல் ஏற்பாட்டை இந்தியப் பேரரசு மேற்கொள்ள வேண்டும். அதுதான் அறவழியாகும். அதற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியது இந்தியப் பேரரசின் அறநெறியாகும்.

தன்னல் நியமிக்கப்பட்ட ஒரு குழுவின் முடிவு கிடைப்பதற்கு முன்னுலேயே, இந்தி மொழியை செயல்படுத்துவதற்கு ஒரு அரசாங்கம் துணிந்து நிற்குமானல், அது நியாயமானது என எவரும் ஒப்புக்கொள்ளார். நியாயமானது என ஒப்புக்கொள்ளாததுமட்டுமன்றி, இந்தி மொழி ஆய்வுக் குழு என ஒன்றை ஏற்படுத்த முன்வந்ததே மக்களை ஏய்க்கவேயாகும் என்றும் ஏற்பட்டு விடும். அத்துடன் நில்லாது, மக்கள் கருத்தறிந்து முடிவான திட்டம் வகுப்பது என்ற போர்வையில், இந்தித் துறையில் தான் கொண்டுள்ள ஒரு செயல் திட்டத்தை, எழுத்துக்கு எழுத்து மாறுபடாமல் ஒரு ஆய்வுக் குழுவைக் கொண்டு சொல்ல வைப்பது என்பதே அரசாங்கத்தின் உள்ளக்கிடக்கையாகும் எனவும் ஏற்பட்டுவிடும்.

மேலே எடுத்துக் காட்டியுள்ள இரண்டு உண்மைகளை உறுதிசெய்யும் வகையிலேயே, இந்தி மொழி பற்றிய ஆய்வுக் குழுவின் இறுதியான ஏற்பாடு வெளியாவதற்கு முன்பாகவே, இந்தியப் பேரரசின் கல்வித் துறை துணை அமைச்சர் ஸ்ரீமாலி, 1960-ம் ஆண்டில் ஆங்கில மொழியுடன் இந்தியும், இந்தியப் பேரரசின் நிர்வாக மொழியாக செயலாற்றப்படும் என அறிவித்துள்ளார். அவரைப் போன்றே, அதே மக்கள் சபையில் நிதி மந்திரி தேஷ்முக், அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட விவரம் இந்தியிலும் மொழிபெயர்த்து நூல் வடிவில் தரப்படும் எனக் கூறியுள்ளார்.

இந்தியப் பேரரசு கல்வித் துறை துணை அமைச்சர் ஸ்ரீமாலி, இந்தியை நிர்வாக மொழியாக்குவது குறித்துக் குறிப்பிட்டுள்ள காலவரையறை; கல்வி அமைச்சரான அபுல் கலாம் ஆசாத் அவர்களுக்குத் தெரியாது என்று சொல்ல முடியாது. அதுபோன்றே, அம்முடிவை இந்தியப் பிரதமர் ஒப்புதல் பெருமலே துணை அமைச்சர் அறிவித்துவிட்டார் என்றும் கூறிவிட முடியாது.

கல்வித்துறை துணை அமைச்சர் தான்தோன்றித்தனமாகவே அக்கருத்தை அறிவித்தார் என்றுகூறப்படுவதானுல், 'கூட்டுப் பொறுப்பு' என ஒன்று அமைச்சரவைக்குக் கிடையாதா என்றக் கேள்விக்குப் பதில் கூறியாக வேண்டும். அதிலும் இந்தி மொழித் திணிப்புப் பிரச்சினை போன்ற முக்கியமானப் பிரச்சினையில், ஒரு குட்டி மந்திரியின் இத்தகைய எதேச்சாதிகாரம் இருக்கலாமா என்றக் கேள்வி கண்டிப்பாக எழுந்தே தீரும்.

ஸ்ரீமாலி அறிவிப்பிலிருந்தும், தேஷ்முக் கூற்றிலிருந்தும் நிச்சயமாக ஒரு உண்மை அம்பலமாகிறது. அதை ஒருவராலும் ஒளித்துவிட முடியாது.

அதாவது, இந்தி மொழித் திணிப்புக் குறித்து இந்திய அரசாங்கம் ஏற்கனவே இறுதியாகத் திட்டமிட்டுவிட்ட ஒரு செயல் முறையை, தாங்களும் ஆராய்ந்து அறிந்து கூறுவதாக கேர் குழு கூறவேண்டும் என்ற ஒரு உடன்பாட்டின்மீது, அந்தக் குழுவை இந்தியப் பேரரசு நியமித்து இருக்கிறது என்பதே அவ்வுண்மையாகும். இல்லையானல், ஒரு பொறுப்பான ஒரு விஷயத்தை ஒரு குழுவிடம் ஒப்படைத்துவிட்டு, அதன் முடிவான முடிவு தெரிவதற்குள்ளாகவே, அக்குழுவை அவமானப்படுத்துவதுபோன்ற ஒரு செயலைச் செய்ய இந்தியப் பேரரசு முன்வருகிறது என்றுல், அதற்கு வேறு எதுதான் நியாயமாக இருக்க முடியும்?

இந்தி மொழிக் குறித்து இந்தியப் பிரதமர் தந்து வரும் வாக்குறுதிகளும், நிறைவேற்ற வேண்டும் என்ற நினைப்பில்லாது தரப்படும் 'அலங்காரச் சொற்களே'யாகும் எனத் தீர்மானிக்க வேண்டிய கட்டாயத்தை, கல்வித்துறை துணை அமைச்சர் ஸ்ரீமாலியின் கூற்று, ஒவ்வொருவருக்கும் உண்டாக்குகிறது.

இதுபற்றி, தேசிய ஏடுகளான 'சுதேசமித்திரன்', 'தினமணி' எழுதியுள்ளவை கருதத்தக்கவையாகும்.

'சுதேசமித்திரன்' கூறுவது:—

ஆச்சரியம்

'1960-ம் ஆண்டு முதல் அரசாங்க நிர்வாகத்தில் ஆங்கிலத்தோடு இந்தியையும் கையாளத் திட்டமிட்டிருப்பதாக மத்திய உதவிக் கல்வி மந்திரி அறிவிக்கிருர். மொழிக் கமிஷன் இப்பிரச்சினை பற்றி ஆராய்ந்து வருகிறது. அதன் முடிவு தெரியு முன் மத்திய மந்திரிகளில் ஒருவர் மேற்குறித்தவாறு அறிக்கைவிடத் துணிந்தது ஆச்சரியமாகும்."

எரிச்சல் உண்டாக்கும்

"அரசியல் சட்டத்தில் குறித்த பதினைந்து வருட கால கெடுவை ஒத்திப் போட வேண்டுமென்று, குறிப்பாக இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாத ராஜ்யங்கள் அநேகமாக ஒருமுகமாக வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில் அந்த கெடுவுக்கு ஐந்து வருஷங்களுக்கு முன்னதாகவே அப்பரிட்சையைத் துவக்கப் போவதாக அறிவிப்பது பெருவாரியான மக்களிடை வீணுக எரிச்சலுண்டாக்கும்." "இந்திதான் மத்திய ராஜாங்க பாஷையாக வேண்டுமென்பதை பொறுப்புள்ள யாரும் ஆட்சேபிக்கவில்லை இதை நமது ராஜ்யக் கல்வி மந்திரியும் அன்று அசெம்பிளியில் கேள்வி நேரத்தின்போது சிறிதும் சந்தேகத்துக் கிடமில்லாதபடி தெளிவுபடுத்தியுள்ளார். ஆனல், அந்த பாஷையை எப்போது, எந்த முறையில் ஆங்கிலத்துக்குப் பதிலாக அமுலுக்குக் கொண்டு வருவது என்பதைப் பற்றியே பிரச்னையெல்லாம்."

வருந்தத்தக்கது

"இதில் பலவந்த முறையைக் கையாளாமலிருந்தால் வேறு மொழியினரிடையே இந்தி தானுக, கூடியவரை துரிதமாகப் பரவக்கூடும் நிர்ப்பந்தப்படுத்துவதாயின், வீணுக எதிர்ப்பே கிளம்பும். உண்மையில் நாட்டில் இந்த அளவு எதிர்ப்பு முற்றியிருப்பதற்குக் காரணம் இந்தி உற்சாகிகள் உற்சாகத்துடன் நில்லாமல் அதை ஒரு வெறியாக வளர்த்துக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்து வருவதே. இந்த வெறிக்குத் தூபம் போடும் வகையிலே மத்தியக் கல்வி உதவி மந்திரியின் மேற்குறித்த அறிவிப்பு அமைந்திருப்பது வருந்தத்தக்கது."

ஒரு பெரிய அநீதி

"தற்போதைய அவசரத் தேவை இந்தியை ஆங்கிலத்துடன் உபயோகிப்பது போன்ற பரிட்சைகள் அல்ல. இந்தியை ராஜாங்க அலுவல்களுக்கு ஏற்றவாறு வளப்படுத்துவதே முதல் வேலை. அரசாங்க அலுவல்களில் அடிபடும் சில பதங்களை இந்தியில் மொழி பெயர்த்துவிட்டால் போதாது. நிர்வாகம் பற்றிய எல்லாக் கருத்துகளையும் தற்போது ஆங்கிலத்தில் எவ்வளவு தெளிவாக, திட்டமாக வெளியிட முடிகிறதோ அத்தகைய ஒருமொழித் தேர்ச்சி இந்தி விஷயத்தில் ஏற்பட வேண்டும். அதற்கு முன்னதாக இந்தியை அரசாங்க காரியங்களில் உபயோகிக்க முற்படுவது இவ்விஷயத்தில் அவசரக் குடுக்கைகளுக்கு அதிகாரமிருப்பதையே குறிக்கும். மேலும் இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்கு இது ஒரு பெரிய அநீதி."

★

'தினமணி' தரும் கருத்து:—

பிசகிய செயல்

"சாதாரணமாக இதைப் பற்றி சொல்ல வேண்டியவர் பிரதம மந்திரி அல்லது உள்நாட்டு மந்திரிதான். அவர்கள் சும்மா இருக்கையில், உதவிக் கல்வி மந்திரி ஒருவர், பட்ஜெட்டின் மீது பொதுவாகப் பேசுகையில், முக்கியமான இந்தக் 'கொள்கைப் பிரச்சினை'யைப் பற்றி, போகிற போக்கில் ஒரு அறிவிப்பைச் செய்திருப்பது முறை பிசகிய செயல். இதை மந்திரி சபை அனுமதிக்கக் கூடாது.

துரதிருஷ்டவசமானது

"பொறுப்புள்ளவர்களைக் கொண்ட அரசாங்க மொழிக் கமிஷன் நியமிக்கப்பட்டு, பல இராஜ்யங்களுக்குச் சென்று மக்களின் கருத்தை அறியும் வேலையில் ஈடுபட்டுள்ளது. பல வித யோசனைகளும் சாதக பாதக விளக்கங்களும் அக்கமிட்டிக்கு சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன. அவற்றை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, பல்வேறு மொழியினரின் சிரமங்களை கருத்திற்கொண்டு, நாட்டின் நிலையான நலனுக்கேற்ப சிபாரிசுகளை அந்தக் கமிஷன் செய்யும். அவற்றை விசேடப் பொறுப்புணர்ச்சியுடன் பரிசீலித்து, முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு இந்திய சர்க்காருக்கு பிறகு இருக்கிறது. உண்மை நிலை இப்படி இருக்கையில், 1960-ம் ஆண்டில் ஆங்கிலத்துடன் இந்தி நிர்வாக மொழியாகும் என்று நிச்சயமாகிவிட்டதுபோலவும், அந்த அடிப்படையில் இந்திய சர்க்கார் வேலை செய்துவருவது போலவும் பொருள்படும்படி குட்டி மந்திரி ஸ்ரீமாலி பேசியிருப்பது துரதிருஷ்டவசமானது.

அவமதிப்பாகும்

"ஸ்ரீமாலி கூறியிருப்பது உண்மையாயின், கேர் கமிஷனை நியமித்திருப்பது எதற்காக என்றுதான் மக்கள் கேட்பர். விசாரித்து சிபாரிசு சமர்ப்பிக்குமாறு அந்தக் கமிஷனை கேட்டிருப்பது வெறும் கண்துடைப்பு விவகாரந்தானு என்று அவர்கள் சந்தேகப்படுவர். தவிர, ஸ்ரீமாலியின் பதில், கேர் கமிஷனுக்கே பெரிய அவமதிப்பாகும்."

திருச்சி — தஞ்சை மாவட்டத்தை

இணைக்கும் பாலம்

ரூ. 15 இலட்சம் செலவில் கட்டப்படுமாம்!

தஞ்சை, மார்ச் 18—

திருச்சி மாவட்டத்தையும், தஞ்சை மாவட்டத்தையும் இணைக்கும் விதத்தில் திருவையாறு சமீபத்தில், விளாங்குடிக்கும்—திருமானுருக்கும் இடையே கொள்ளிடத்தின் மேல் சுமார் ரூ. 15 இலட்சம் செலவில் பாலம் கட்டும் திட்டம் 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

---

21 விவசாயத் துறை நிறுவனங்கள்

மத்திய சர்க்காரின்கீழ் இயங்கி வருகின்றனவாம்

புதுடில்லி, மார்ச் 15—

தற்போது இந்தியாவில் மத்திய சர்க்காரின்கீழ் 21 விவசாயத் துறை நிறுவனங்கள் இயங்கி வருகின்றனவாம்; அவைகளில் 5 நிறுவனங்கள் விவசாயத் துறைக் கல்வியில் பயிற்சியளித்து வருகின்றனவாம்.

இந்த 5 நிறுவனங்களிலும் மொத்தம் 604 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனவாம்.

கருணையே கருணை!

"அரிசியின் விலை உயர்ந்துவிடுமோ என்று தென்னுட்டில் அரிசி உபயோகிப்பவர்கள் கவலைப்பட வேண்டியதில்லையாம்!

ஏழைகளுக்குக் கஷ்டம் ஏற்படும் வகையில் அரிசியின் விலை உயர்ந்துவிட இந்திய சர்க்கார் அனுமதிக்கமாட்டார்களாம்!

தங்கள் கையிருப்பில் உள்ள அரிசியை விடுவித்து அரிசியின் விலை நியாயமான அளவில் இருக்குமாறு சர்க்கார் பார்த்துக்கொள்வார்களாம்!

இந்திய சர்க்கார் உணவு இலாகா உதவி மந்திரி எம். வி. கிருஷ்ணப்பா கோலாரில் இவ்வாறு கூறியுள்ளார்!

உங்களுக்குத் தெரியுமா?

தொழிலாளர்களுக்கான அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம், இப்பொழுது சுமார் 30 தொழில் துறைப் பிரதேசங்களில் அமுல் நடத்தப்பட்டு வருகிறது; அதன்கீழ் மொத்தம் சுமார் 10-இலட்சம் தொழிலாளர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

இந்தியாவில் 1951—52-ம் ஆண்டில் மொத்தம் 3,617-இலட்சம் டன் கோதுமை இறக்குமதி செய்யப்பட்டது; 1955—56-ம் ஆண்டில் இறக்குமதி 326-இலட்சம் டன்னுகக் குறைந்துவிட்டது.

இந்தியாவில் பிரதிமாதம் மொத்தம் சுமார் 1,45,00,000 க்ஷவர பிளேடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஆட்சி மொழிக் குழு

அறிவித்த நோக்கத்திற்கு அமைக்கப்பட்டதாக நம்பமுடியவில்லையே!

"'குஷ்டரோக வியாதியஸ்தர்கள் அனைவரையும் ஒதுக்கி வைப்பதென்பது இயலாத காரியம்' என்று மந்திரி ஷெட்டி, சென்னை சட்டசபையில் கூறியிருக்கிறார். தெற்கிலிருந்து டில்லி போகிற அன்பர்களைக் கேட்டால், 'இந்தி ரோக நிவாரணம்தான்' இப்போது அவசியம் என்கிறார்கள். இந்த ரோகத்தால் பீடிக்கப்பட்ட சிலர் கருப்பராயன் கோயில் பூசாரியைப்போல் ஆடுகிறார்களாம்.

"'ஆங்கிலம் நீடிப்பதால் அவமானம் எதுவும் இல்லை; அது நமது சொத்தாகிவிட்டது. ஆங்கிலம் நீடிப்பது அவமானம் என்றால் அமெரிக்காவிடம் கையேந்தி உதவி பெறுவது அதைவிடப் பெரிய அவமானமல்லவா?' என்று ராஜாஜி கேட்கிறார்.

"இவர் கேட்பது உத்திரப் பிரதேச உத்தமர்களின் காதில் விழுமா என்பதுதான் தெரியவில்லை.

"'இந்தியை வலுக்கட்டாயமாகத் திணிக்கப்போவதில்லை; அது ஆபத்தானது,' என்று நேருஜி அடிக்கடி கூறுகிறார். ஆனால் உண்மை நிலை என்ன?

"சென்னையிலிருந்து ஒரு வர்த்தகரோ, அல்லது தொழில் நடத்துகிறவரோ டில்லி சர்க்கார் காரியாலயத்திற்கு சென்றால், 'சப்ராசியிலிருந்து மூலஸ்தானத்தில் உள்ள முக்கிய அதிகாரிவரை எல்லோரும் முதலில் இந்தியில்தான் ஆரம்பிக்கிறார்களாம். நமக்கு அது புரியவில்லை என்பதைத் தெரிந்து கொண்ட பிறகு, இலக்கணம் புறக்கணிக்கப்பட்ட ஆங்கிலத்தில் பேசுவதாகக் கேள்வி. எப்படியும் அங்குள்ளவர்களுக்கு நாம் என்ன விஷயத்திற்கு வந்தோம் என்பதைப் புரிய வைப்பதற்கே மூன்று, நான்கு நாட்கள் ஆகிவிடுகிறது என்கிறார்கள்.

"இந்தியில் அச்சடிக்கப்பட்டுள்ள பாரங்களைக் கொடுத்தால் அதை எப்படிப் பூர்த்தி செய்வது என்பது இங்கிருந்து செல்லும் அன்பருக்குப் புரிவதில்லை.

"முன்பு ஆங்கிலேயர்கள் 'துபாஷ்'களை வைத்திருந்தது போல, இங்கிருந்து டில்லி செல்லும் அன்பர்களும் தலைக்கு ஒரு 'துபாஷ்' வீதம் அழைத்துச் செல்லலாம். இது எல்லோராலும் முடிகிற காரியமா?

★

"மதுரை கோயிலைச் சுற்றி, 'யாத்ரீகர்'களுக்கு வழிகாட்டவும், விளக்கம் கூறவும் ஒரு கூட்டம், என்றும் காத்துக் கொண்டிருக்கிறது. ஆங்கிலம், இந்தி, தெலுங்கு, மலையாளம், வங்காளி போன்ற எந்தப் பாஷையில் விளக்கம் வேண்டுமானாலும் இவர்கள் சொல்லுவார்கள். ஆகவே, இந்த அன்பர்களுக்கு மதுரையில் போதிய அறுவடை கிடைக்காவிட்டால் டில்லி நோக்கிச் செல்லலாம். அசோக சக்கரத்தின் குடை நிழலில் அங்கு வருமானமும் அதிகரிக்கும்.

★

"மத்திய சர்க்கார் நிதி மந்திரி தேஷ்முக் ஒரு முக்கியமான அறிவிப்பை வெளியிட்டுள்ளார். அதாவது, அடுத்த வருடத்திலிருந்து இந்தியிலும் பரிபூரண 'பட்ஜெட்' வெளியிடப்படுமாம். இந்த வருடம், அச்சடிக்கும் இடத்திலிருந்து 'பட்ஜெட்' இரகசியம் வெளியாகி விட்டது என்கிறார்கள். இனி அடுத்த வருடம் மொழி பெயர்ப்பு நடக்கும் பகுதியிலிருந்து இரகசியம் வெளியேறி விடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

"எது எப்படியிருந்த போதிலும், அடுத்த வருடம் இந்தி 'பட்ஜெட்' வேறு வெளிவரப் போகிறது. அத்துடன் 1960-ம் ஆண்டு முதல் சர்க்கார் நிர்வாகத்தில் ஆங்கிலத்துடன் இந்தியையும் கையாளத் திட்டமிட்டிருக்கிறார்கள். இந்த அறிவிப்பை மத்திய சர்க்காரின் உதவிக் கல்வி மந்திரி வெளியிட்டுள்ளார்.

"எதற்காக இந்த அவசரக் கோல அறிவிப்புகள் என்பது தான் புரியவில்லை.

'சர்க்கார் ஏற்கனவே பி. ஜி. கெர் தலைமையில் மொழிக் கமிஷன் ஒன்றை நியமித்திருக்கிறார்கள். பல ராஜ்யங்களுக்கு இந்தக் கமிஷன் திக்விஜயம் செய்து அபிப்பிராயங்களைச் சேகரித்து வருகிறார்கள். இவ்வருடம் ஜூலை முடிவுக்குள் கமிஷன் தனது ரிப்போர்ட்டை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கும். அதற்குப் பிறகு நிர்வாகத்தில் அமையப்போகும் மொழியின் லிபி போன்ற மற்ற விவரங்கள் குறித்து சர்க்கார் 'அறிவிப்பு வெளிவரலாம்.

★

"இதற்குள் ஒரு மந்திரி அடுத்த வருடம் இந்தியில் 'பட்ஜெட்' வெளிவரும் என்கிறார். இன்னொரு மந்திரி 1960-ம் ஆண்டிலிருந்து நிர்வாகத்தில் இந்தி அமுலுக்கு வந்துவிடும் என்கிறார். இது உண்மையானால் பிறகு கமிஷனை எதற்காக நியமித்தார்கள்? அவர்கள், ராஜ்யத்திற்கு ராஜ்யம் சென்று பிரமுகர்களைச் சந்தித்து அபிப்பிராயங்களை எதற்காகச் சேகரிக்க வேண்டும்? மந்திரிகளின் போக்கைப் பார்த்த பின்பு, இந்தக் கமிஷன் அறிவிக்கப்பட்ட நோக்கத்திற்கு அமைக்கப்பட்டதா என்று நம்பமுடியவில்லை. அதிருப்தி அடைந்துள்ளவர்களின் கண் துடைப்புக்குத்தான் இந்த நடவடிக்கை போலிருக்கிறது!

—18-3-56 'நவ இந்தியா' இதழில், 'ஊர் வம்பு' என்ற பகுதியில், 'யு. ஆர்.' என்பவர் இவ்வாறு எழுதியுள்ளார்.

எங்கெல்லாம் பெட்ரோல்கிடைக்கும்?

இந்தியப் பேரரசு ஆராய்ச்சி நடத்தும்

இராஜஸ்தானில் ஜெய்சால்மீர் எனும் இடம் தவிர, இந்தியாவில் இதர இடங்களில் எங்கெல்லாம் பெட்ரோல் கிடைக்க முடியும் என்பதை ஆராய டெல்லி சர்க்கார் பெரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறார்களாம்.

இயற்கை வள விஞ்ஞான ஆராய்ச்சி இலாகாவினர் இந்தத் தகவலைத் தங்கள் ஆண்டு அறிக்கையில் தெரிவித்திருக்கின்றனராம்.

சமீப காலத்தில் பெட்ரோல் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மற்ற நாடுகளில் எவ்வளவு சாதகமான நிலைகள் உள்ளனவே அவ்வளவு சாதகமான நிலை இந்தியாவிலும் இருப்பதாக நிபுணர்கள் கருதுகின்றனராம்.

குஜராத்தில் சாம்பே என்ற இடத்திலும் கஸரா மாவட்டத்தில் ஜுவாலாமுகி என்ற இடத்திலும் உ. பி. பஞ்சாப், மேற்கு வங்கம், அசாம் ஆகிய மாநிலங்களிலும் ஆராய்ச்சி நடத்தப்படுமாம்!

பள்ளி இறுதி வகுப்புப் பரீட்சை

64,211 மாணவர்கள் எழுதுகின்றனர்

கடந்த மார்ச் 15-ந் தேதியன்று துவங்கிய பள்ளி இறுதி வகுப்பு (எஸ் எஸ் எல்.சி.) தேர்வுப் பரீட்சைக்கு 64,211 பேர் பெயர்களைப் பதிவு செய்திருக்கின்றனர்; சென்ற ஆண்டில் 56,923 ஆக இந்த எண்ணிக்கை இருந்தது.

அந்தப் பரீட்சை இந்த ஆண்டு 394 இடங்களில் நடைபெறுகிறது. சென்ற ஆண்டு 362 இடங்களில் நடைபெற்றது.

இந்த மாணவர்கள் அனைவரும் 867 பள்ளிகளைச் சேர்ந்தவர்களாவர்.

பஞ்சு சுத்திகரிப்பு இயந்திரங்கள்

ரஷ்யாவிலிருந்து இந்தியாவுக்குக் கப்பலேற்றப்படுகிறதாம்

ரஷ்யாவிலிருந்து இந்தியா கேட்டிருந்த பஞ்சு சுத்திகரிப்பு இயந்திரங்களின் முதல் பகுதி இந்தியாவிற்குக் கப்பலேற்றப்படுகிறதாம்.

இந்த இயந்திரங்கள் மிக நவீனமானவை என்று கூறப்படுகின்றது.

அப்துல் சத்தார்

பாக். உள்நாட்டு மந்திரியாக நியமனம்

கராச்சி, மார்ச் 17—

கிழக்கு வங்க கவர்னராக பஜ்லுல் ஹக் நியமிக்கப்பட்டதை ஒட்டி, பாகிஸ்தான் ஐக்கிய முன்னணிக் கட்சி உறுப்பினரான அப்துல் சத்தார் பாகிஸ்தான் மந்திரி சபையில் உள்நாட்டிலாகா மந்திரியாகப் பொறுப்பேற்றிருக்கிறார்.

'நேரு பிறந்த நாட்டில்தான் இந்து-முஸ்லீம் வேறுபாடு'

'தமிழகத்தில் உற்றார் உறவினர் போன்று வாழ்கின்றனர்'

உமருப் புலவர் சமாதி முன் கலைவாணர்

"உமருப் புலவர் முகமதியர்கள் மட்டும் கொண்டாடப்பட வேண்டியவரல்ல; தமிழ் மக்கள் அனைவரும் போற்றிக் கொண்டாடப்பட வேண்டியவர். இந்து—முஸ்லீம் என்ற பாகுபாடு இங்கே—தமிழகத்தில் கிடையாது. இங்குள்ள நாம் அனைவரும் உற்றார்-உறவினர் பாசம் கொண்டு வாழ்கிறோம். இந்து—முஸ்லீம் வேறுபாடு எல்லாம் வட நாட்டில்—நேரு பிறந்த இடத்தில்தான்,"

என்று என். எஸ். கிருஷ்ணன் அவர்கள், எட்டயபுரத்தில் உமருப் புலவர் சமாதிமுன் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவரும், தோழியர் டி. ஏ. மதுரமும் உமருப்புலவர் சமாதிமீது மலர்மாலை சூட்டினர்.

அகதிகளுக்காகத் தொழில் துவக்குவோருக்கு!

ரூபாய் 12 கோடி கடன் வழங்கப்படுமாம்

ஓடிவருவோருக்குத் தேடிப்போய் உதவி செய்யும் டெல்லியின் கருணை

அகதிகள் என ஓடிவருபவர்களுக்கு ஓடி ஓடிப்போய் வரவேற்புத் தந்தும், வாழ வழியும் வகுத்துத்தரும் டெல்லி சர்க்கார், அவர்களுக்கு நீண்ட நெடுங்காலத்திற்கு வசதியான வாழ்வு தருவதற்காகப் புதிய புதிய திட்டங்களைக் கோடிக்கணக்கான ரூபாய் செலவில் தீட்டி செயல்ப[illegible]தி வருவது எல்லோரும் அறிந்ததே.

இப்போது, அகதிகள் கு[illegible]ற்றப்பட்டு வாழ்ந்துவரும் 'காலனி'களில், அகதிகளுக்கு[illegible]ண்டகால அடிப்படையில் வேலை வசதி அளிக்கும்பொருட்[illegible] புதிய தொழில்களை ஆரம்பிக்க முன்வரும் தனிப்பட்ட [illegible]ழிலதிபர்களுக்கு ரூ. 12 கோடி வரை கடன் உதவி தர டெல்[illegible] சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்களாம்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தத் திட்டத்திற்கு வழிசெய்ய அகதி புனரமைப்பு இலாகா உத்தேசித்துள்ளதாம்.

இயந்திரங்கள் வாங்குவதற்கு அந்த உதவி அளிக்கப்படுமாம். ஆனால், தொழில் அதிபர்கள் அதற்குச் சமமான தொகையை முதலீடு செய்யவேண்டுமெனக் கோரப்படுவார்களாம்.

கடன் உதவி தவிர, தொழில் நடத்துவதற்குத் தேவையான மின்சாரம், தண்ணீர் வசதிகளுடன் நிலம், தொழிற்சாலைக் கட்டிடம் ஆகியவை வேறு நீண்ட காலக் குத்தகைக்குச் சலுகையுடன் தரப்படுமாம்.

இரண்டாம் திட்டக் காலத்திற்குள் அகதிகளாயிருக்கும் நிலையிலிருந்து பெரும்பான்மையினர் விடுபட்டு, இதர மக்களுடன் ஒன்றுபட்டுவிட வேண்டும் என்பதுதான் இம்மாதிரி சலுகைகள் தரப்படுவதின் நோக்கமாம்.

சர்க்கார் தருகிற கடன் ரூ. 12 கோடி அளவுக்கு முதலாளிகளும் முதலீடு செய்தால் மொத்தம் ரூ. 24 கோடி பெறுமான தொழில்கள் அமைக்கப்பட முடியும் என்றும் இந்தத் தொழிற்சாலைகளின் பலனாக சுற்றுவட்டாரத்தில், வீட்டு உபயோகத்திற்குத் தேவையான பண்டங்களை உற்பத்தி செய்யும் மற்ற வகைத் தொழில்களும் ஏற்பட வழி பிறக்கும் என்றும், அகதிகள் காலனிகள் 'சுய நிறைவு' கொண்டவையாக மாறிவிடுமென்றும் கூறப்படுகிறது.

பாக்.வரவு-செலவுத் திட்டம்

உபரி வருமானம்; புது வரி விதிப்பு இல்லை

பாகிஸ்தானின் ஒன்பதாவது ஆண்டு வரவு-செலவுத் திட்டம் மத்திய மக்கள் சபையில் தாக்கலாகியிருக்கிறது.

அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் கடந்த 16-ந் தேதி மக்கள் சபை உறுப்பினர்களாகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டதும் நிதி மந்திரி அம்ஜத் அலி வரவு-செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்திருக்கிறார்.

1956—57-ம் ஆண்டில் வரவு ரூ. 131·02 கோடியாகவும் செலவு ரூ. 130 44 கோடியாகவுமிருக்கும் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. வரவைவிட செலவு குறைந்திருப்பதால் புது வரி விதிப்புகள் ஏதும் உத்தேசிக்கப்படவில்லை.

ரூ 58 இலட்சம் மிச்சம் காட்டும் அந்தத் திட்டத்தில் இந்தியப் பிரிவினைக் கடன் வகையில் முதலீட்டுச் செலவில் ரூ. 7 கோடி இந்தியாவிற்குத் தருவதற்காகத் தற்காலிக அடிப்படையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் தற்காப்பிற்காக மட்டும் ரூ. 90 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

பஞ்சாயத்துக்கள் நகரசபைகளாகும்

அதிகாரங்கள் குறைக்கப்பட மாட்டாதாம்

'ஸ்தல ஸ்தாபனங்களின் அதிகாரங்கள் குறைக்கப்பட மாட்டாது' என்று, முதன் மந்திரி காமராசர், நகரசபைத் தலைவர்களின் மாநாட்டிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'அதிகாரங்களை சர்க்காரும், ஸ்தல ஸ்தாபனங்களும் பங்கிட்டுக் கொள்வது நிர்வாக வசதிக்காக மட்டுமேதான். அப்படியிருக்கும்போது மாறியுள்ள சூழ்நிலைகளுக்கேற்ப இருக்கும் அதிகாரங்களைப் பங்கிட்டுக்கொள்வதில் தவறென்ன? எந்த ஒரு சட்டமும் எல்லாக் காலத்திற்கும் பொருந்துவதாக இருக்க முடியாது. சூழ்நிலைகள் மாறும்போது சட்டங்கள் மாறத்தான் வேண்டும்" என்றும் காமராசர் குறிப்பிட்டாராம்.

மாநாட்டைத் துவக்கிவைத்த மந்திரி இராமசாமி படையாச்சி, 'இப்போதுள்ள முதல்தரப் பஞ்சாயத்துகள் 'முனிசிபாலிடி'களாக வேகமாக மாற்றப்படும்' என்று கூறியிருக்கிறார்.

முத்துக் குளித்தல்

சர்க்காருக்கு ஏற்பட்ட நஷ்டம்

"முத்துக் குளிப்பிற்காக சென்னை சர்க்கார் 1951—52ம் ஆண்டில் செலவிட்டது ரூ. 27,613 ஆகும். ஆனால் கிடைத்த வருமானமோ ரூ. 24 மட்டுமே!

"கடந்த 27 ஆண்டுகளில் விவசாய இலாகாவினர் இதற்காக ரூ. 5 இலட்சத்திற்கு மேல் செலவிட்டிருக்கின்றனர்; ஆனால் கிடைத்த வருமானமோ ஒரு இலட்சம் ரூபாய்தான்.

"ஆகவே, சர்க்கார் இதில் வீண் செலவு செய்யாமல், சர்க்காரே முத்துக் குளிப்பை நடத்துவதற்குப் பதிலாக அந்த உரிமையை ஏலத்தின் மூலம் யாருக்காவது குத்தகைக்கு விட்டுவிடுவது நல்லது,"

என்று, பொதுக் கணக்கு குழு சிபாரிசு செய்திருக்கிறது.

கோவாவிலிருந்து மக்கள் வெளியேற்றம்

சவந்தவாடி, மார்ச் 17—

கோவாவில் பிழைப்பு நடத்துவதே துர்லபமாகிவிட்டதாம். அதனால் பலர், கைது செய்யப்படும் அபாயத்தையும் பொருட்படுத்தாமல் இந்திய எல்லைக்கு ஓடி வந்தவண்ணமுள்ளனராம்!

5,000 கிராமச் சேவிகைகளுக்குப் பயிற்சி!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 5,000 கிராம சேவிகைகளுக்குப் பயிற்சியளிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

படித்த வேலையற்றோருக்கு நிவாரணம்

3,076 பேருக்கு ஆசிரியர் வேலை தர சர்க்கார் திட்டம்

படித்துவிட்டு வேலையற்றிருப்போருக்கு நிவாரணமளிப்பதற்காக நடப்பு ஆண்டுத் திட்டங்களைப் பொறுத்து ரூ. 12,94,400 செலவாகுமென சென்னை சர்க்கார் எதிர்பார்க்கின்றனராம்.

இந்தத் திட்டங்களின்கீழ் 3,076 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்றும், இதில், திறக்கப்படவிருக்கும் புதிய பள்ளிகளில் 1,592 பேர் வேலைக்கு அமருவர் என்றும், மீதியுள்ளோர் தற்போதுள்ள [illegible]ளிகளில் நியமிக்கப்படுவார்கள்[illegible]றும் கூறப்படுகிறது.

சர்க்கார் தொழில் நிறு[illegible]

ஊழியர்களுக்கு[illegible] 'போனஸ்'

சென்னை மந்திரி விளக்கம்

சென்னை, மார்ச் 19—

" சர்க்கார் நிர்வகிக்கும் தொழில்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு இப்போது போனஸ் தரப்படுவதில்லை; இந்தக் கொள்கையை வகுத்திருப்பவர்கள் டெல்லி சர்க்கார்; எனவே, சர்க்கார் தொழிலாளர்களுக்குப் 'போனஸ்' கிடைக்க வேண்டுமானுல் டெல்லி சர்க்காரின் கொள்கை மாறியாக வேண்டும். இதை அந்த சர்க்கார்தான் செய்ய முடியும்.

" சர்க்கார் நடத்தும் தொழில்களில் ஏதேனும் இலாபம் கிடைக்கிறது என்றால், அந்த இலாபம் மீண்டும் அந்தத் தொழிலிலேயே முதலீடு செய்யப்படுகிறது.

" தொழிலாளர்களுக்கு போனஸ் தரும் விவகாரத்தில் சென்னை சர்க்கார் எந்தக் கருத்தையும் அறிவிக்காது ; ஆனுல், போனஸ் தரப்படுவதற்குக் குறுக்கேயும் நிற்காது;"

என்று, மந்திரி இராமநாதபுரம் ராஜா அறிவித்திருக்கிறார்.

திரு-கொச்சி அரசியல் விசித்திரங்கள்

பனம்பள்ளியே மீண்டும் மந்திரி சபை அமைப்பாராம்!

'போன மச்சான் திரும்பி வந்தான்' என்பார்கள், பழமொழி கூறுவோர்!

'என்னுல் இயலாது' என்று கூறி, திரு—கொச்சி மந்திரி சபைப் பொறுப்பிலிருந்து பனம்பள்ளி கோவிந்த மேனன் விலகிச் சென்ருர் ; ஆனுல், அவர் இப்போது மீண்டும் மந்திரிசபை அமைக்கக்கூடும் என்று கூறப்படுகிறது.

இராஜப்பிரமுகர், அவரையே திரும்பவும் பொறுப்பேற்குமாறு அழைத்திருக்கிறாராம்!

மேனன், 'பூமணம்' இன்றி எப்படித் திரும்புவேன் — என்று யோசித்துக்கொண்டிருக்கிறாராம் !

'மீண்டும் முடியுமா?' என்று முயற்சிக்கிறாராம் !

'தனியொரு கட்சி என்ற முறையில் காங்கிரசிற்குத்தான் பெருவாரி இடங்கள் இருப்பதால், சட்டசபையில் உள்ள வேறு சிலரின் ஆதரவு கிடைக்குமானுல் பதவி ஏற்கத் தயங்கமாட்டேன்' என்றும் பத்திரிகையாளரிடம் பனம்பள்ளி தெரிவித்துள்ளாராம் !

பெல்லாரியில் ஆந்திரர் கடையடைப்பு

பெல்லாரி தாலுகாக்களை மைசூர் மாநிலத்தில் சேர்ப்பதென டெல்லி சர்க்கார் செய்த முடிவை எதிர்த்து நகரில் ஆந்திரர்களுக்குச் சொந்தமான கடைகள் எல்லாம் மூடப்பட்டன என்றும், கன்னடியர்தம் கடைகளும், ஓட்டல்களும் வழக்கம்போல திறந்து வைக்கப்பட்டிருந்தன என்றும் தெரியவருகிறது.

பிரிட்டனிடம் 'பென்ஷன்' பொறுப்பு

ரூ. 414 இலட்சம் இந்திய சர்க்கார் தருகின்றனர்

சென்னை, மார்ச் 19—

சென்னையில் சேவை புரிந்த ஆங்கில அதிகாரிகளுக்கு தரப்படுவதற்கான 'பென்ஷன்'களின் முழுப் பொறுப்பையும் பிரிட்டிஷ் அரசியலார் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். அதற்கென இந்தியப் பேரரசினர் ரூ. 414 இலட்சம் பிரிட்டனுக்கு கொடுத்திருக்கிறார்கள். 30 ஆண்டுக் கடனாக 1 சத[illegible]கித வட்டியுடன் இந்திய சர்க்கார் இதை வசூலித்துக் கொள்வார்களாம் !

ஆந்திரா, மைசூர் மாநிலங்களுக்கு 'பென்ஷனை' மொத்தமாக கொடுத்த வகையில், சென்னை சர்க்கார் இவ்வருடம் செலவு செய்துள்ள பணம் ரூ. 408 இலட்சம் !

'குடந்தை மகா மக விழா' எதிரொலி!

போலீஸ் செலவு பலஇலட்சம் உயர்ந்தது

சென்னை, மார்ச் 19—

குடந்தையில் நடைபெற்ற மகாமக விழாவை யொட்டி ஏற்படுத்திய போலீஸ் பாதுகாப்புக்காகவும், மதுவிலக்கு போலீசாரை சாதாரண போலீசாருடன் சேர்த்த வகையிலும் சென்னை மாநில சர்க்காருக்கு 1955-56ல் ரூ. 32,47,600 அதிகச் செலவு உயர்ந்துள்ளது.

வ.ஆ.மா. தி.மு. கழகச் செயலாளர்களுக்கு:

" என் சுற்றுப் பயணம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில், திடீரென்று இன்று (19-3-56) நண்பகல் எனது தம்பி எஞ்சினில் அடிபட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகச் செய்தி வந்ததின்பேரில் நான் என் சுற்றுப்பயணத்தைத்தொடர்ந்து நடத்த முடியாமைக்கு வருந்துகின்றேன். மீண்டும் என் சுற்றுப்பயணம் தொடரும் தேதி விவரங்களைப் பின்னர் அறிவிக்கின்றேன். செயலாளர்கள் தயைச் செய்து பொறுத்தருள் வார்களாக,"

என்று, வட ஆற்காடு மாவட்டத் தி. மு. கழகச் செயலாளர் முல்லை—சத்தி அறிவிக்கிறார்.

ஓய்வுபெற்ற ரயில்வே அதிகாரிகள்

மீண்டும் நியமனம் பெறுவராம்

திருச்சி, மார்ச் 19—

அண்மையில் ஓய்வு பெற்ற 60-வயதுக்குக் குறைவான இரயில்வே அதிகாரிகளை அவசியமானுல் மீண்டும் வேலைக்கு அமர்த்திக்கொள்ளலாமென பல்வேறு இரயில்வேக்களுக்கும் 'இரயில்வே போர்டார்' உத்தரவு பிறப்பித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட ஏற்பாடுகள் காலதாமதமன்னியில் விரைவாக நிறைவேற்றி வைக்கப்படுவதற்காகவே அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாயும் தெரியவருகிறது.

ஆலைத் தொழிலாளர்மீது தடியடி; 40 பேருக்குக் காயம்

'போனஸ்'கோரி ஆர்ப்பாட்டம் செய்தவர்மீது போலீசார் பாய்ச்சல்

பம்பாய் நகரில் வடக்குப் பகுதியில் துணி ஆலை முன்பாக ஆர்ப்பாட்டம் செய்த தொழிலாளர் மீது தடியடிப்பிரயோகம் செய்த போலீசார், மூன்று பெண்கள் உள்பட 40 தொழிலாளர்களைக் காயப்படுத்தியிருக்கின்றனர் என்று தெரிகிறது.

'போனஸ்' தகராறு காரணமாக தொழிலாளர் ஆர்ப்பாட்டம் செய்ததாகக் கூறப்படுகிறது.

மூன்று மாதச் சம்பளம் போனசாகத் தரப்பட வேண்டுமென்பது தொழிலாளர் கோரிக்கை: ஆனுல், ஆலை முதலாளிகள் சங்கத்தவரும், தேசிய தொழிற் சங்கத்தவரும் கூடி, 15 நாள் சம்பளம் மட்டுமே போனசாகத் தரப்படும் என்று நிர்ணயித்தனராம்.

இந்த அநியாய முடிவை எதிர்த்தே தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

மூன்று தொழில் 'எஸ்டேட்டுகள்' நிறுவப்படும்

ரூ. 83,64,558 செலவில் மூன்று தொழில் எஸ்டேட்டுகள் விருதுநகர், பாலக்காடு, கிண்டி ஆகிய இடங்களில் நிறுவ சென்னை சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது.

விருதுநகர், கிண்டி இவ்வெல்லாம் இடம் வாங்குவதற்கு டெல்லி சர்க்கார் ரூ. 10,50,000 கடன் வழங்கியுள்ளார்கள் என்றும் தெரிகிறது.

மீன் பிடிக்க விசைப்படகுகள்

தயாரித்து விற்பனை செய்ய சர்க்கார் திட்டம்

சென்னை, மார்ச் 19—

ஒவ்வொன்றும் ரூ. 10,500 செலவில் மீன் பிடிப்பதற்காக 20 இயந்திரப் படகுகள் அமைத்து அவற்றை மீனவர்களுக்கு விற்பதற்கான திட்டம்ஒன்றை சென்னை சர்க்கார் அங்கீகரித்துள்ளனராம்.

படகுகளின் விலையை ஏழு ஆண்டுக் காலத்தில் தவணைகளில் வசூலிக்கப்படுமாம்.

இந்த நடைமுறை ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 2,10,000 தேவைப்படுமென சொல்லப்படுகிறது.

கல்விச் சலுகை

சர்க்காருக்கு ரூ. 60 இலட்சம் அதிகச் செலவாம்

ஆண்டொன்றுக்கு ரூ 1,200க்குக் குறைவான வருவாயுள்ளோரின் குழந்தைகளுக்கும், சர்க்கார் ஊழியரின் குழந்தைகளுக்கும் சம்பளச் சலுகை தருவதின் விளைவாக கல்வித் துறையில் 1955—56-ம் ஆண்டில் எதிர்பார்த்ததை விட சென்னை சர்க்காருக்கு ரூ. 60 இலட்சம் அதிகம் செலவாயிற்றும். டில்லியில் உள்ள சென்னை கல்விச் சங்கத்துக்குத் தரப்பட்ட ரூ 1 இலட்சம் நன்கொடை இதில் அடக்கமாம்.

சென்னை, மார்ச் 19—

தேனும்பேட்டையிலுள்ள புதிய பெண்கள் கல்லூரியின் கட்டிடத்துக்காக சென்னை சர்க்கார் ரூ. 75,000 மானியம் தருகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சிக்கல் தீர்க்கும் சிறந்த முறை

குடிகள் கருத்தறியும் கருவூலம்

அதிருப்தி அகற்றும் அறிவுப் பாதை

வரலாறு கண்ட வாக்கெடுப்புகளைப் பிரதமர் அறியாரா ?

பின் ஏன் வாக்கெடுப்பு என்றால் பதறுகிறார்? பிடிவாதம் பேசுகிறார் ?

" இரு மாகாண அரசாங்கங்களிடையே உடன்பாடான முடிவு ஏற்படவில்லையென்றால், சிக்கலை மக்களுடைய தீர்ப்புக்கே விட்டுவிடுவது என்பது மக்களாட்சி நிர்வாகத்தில் கையாளப்படும் ஒரு முறையாகும். ஏனென்றால், பொது மக்களுடைய தீர்ப்பிற்கு மேலானது வேறொன்றுமில்லை. இம்முறை, நவீனகாலத்தில் முதன் முதலாக 166 ஆண்டுகளுக்கு முன் பிரான்சில் கையாளப்பட்டது.

" அவிக்கிருன், கொம்தாத் வெனேசான் என்ற பகுதிகள் பிரான்சுடன் இணைக்கப்பட வேண்டுமா, அல்லது வாடிகன் நிர்வாகப் பகுதியோடு சேர்க்கப்பட வேண்டுமா என்ற சிக்கலைத் தீர்ப்பதற்கு இதுதான் ஒழுங்கான வழி என்று பிரெஞ்சு சட்டசபை முடிவு செய்தது, 98 கொம்யூன்களில் 'ப்ளெபிசைட்' அல்லது பொதுமக்கள் வாக்கெடுப்பு நடைபெற்றது. பிரான்சோடு அப்பகுதிகள் இணைக்கப்பட வேண்டும் என்று மக்கள் தம்முடைய விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.

" இதற்கடுத்த இரண்டு ஆண்டுகளில், சவாய் என்ற பகுதியிலும், நீஸ் என்ற பகுதியிலும், இக்கொள்கை பின்பற்றப்பட்டது. அப்பகுதி மக்களும் பிரான்சோடு இணைய வேண்டும் என்று வாக்களித்தார்கள்; மக்கள் விருப்பத்தை அரசினர் நிறைவேற்றினர்கள்.

" இதற்குப்பின், பல ஆண்டுகள் கழித்து, மால்டேவியா, வலேசியா என்ற டானியூப் ஆற்றோர மாகாணங்களின் புனரமைப்பைக் குறித்து, பொதுமக்கள் வாக்கெடுப்பு நடைபெற்றது. இதன் பின், பத்து ஆண்டுகள் சென்ற பிறகு, இவ்விரு மாகாணங்களும் ஒரே அரசாங்கமாக மாற வேண்டும் என்ற கொள்கையைப் பற்றி, மீண்டும் பொது மக்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவித்தார்கள். இவ்விரு வாக்கெடுப்புக்கள் பயனுக உருவான தனியரசு தான் ருமேனியா என்ற சிறு ஐரோப்பிய நாடாகும்.

" பின்னர், இதாலியில் இம்முறை கையாளப்பட்டது. சிசிலி, நேப்பிள்ஸ், அம்பிரியா, வெனீசியா, ரோம் முதலிய பகுதிகளில் வெவ்வேறு ஆண்டுகளில் மக்கள் தங்களுடைய விருப்பத்தைப் பொது வாக்கெடுப்பின் மூலம் வெளியிட்டார்கள்.

" அயோனியத் தீவுகள் கிரீசுடன் சேர வேண்டும என்ற மக்கள் கருத்தும் பொது வாக்கெடுப்பின் பயனுக நிறைவேற்றப்பட்டது.

" 1905-ம் ஆண்டில், நார்வேயிலிருந்து சுவீடன் தனி நாடாகப் பிரிந்ததும் இப மக்களாட்சி முறையைப் பின்பற்றியேயாகும்.

" இந்தியாவில், எல்லைப் பகுதிச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், மொழி வழிப் பகுதிப் பிரிவினைச் சச்சரவுகளை முடிவு செய்வதற்கும் இம்முறையை ஏன் பின்பற்றக்கூடாது என்ற வினு எழுகின்றது. மக்கள் கருத்திற்கும் அரசாங்கத்தின் கொள்கைக்கும் முரண்பாடு இருந்து வருவதால், இத்தகைய முறையைப் பின்பற்றுவதற்கு அரசியலார் அஞ்சுகிருர்கள் என்றே தோன்றுகிறது.

"தேவிகுளம், பீர்மேடு, கூடலூர்ப் பகுதிகளை எடுத்துக் கொள்வோம்—அங்குள்ள மக்களில் மிகப் பெரும்பான்மையினர் தமிழ் மக்களேயாவர். தாம் வாழும் நிலப் பகுதிகள் தமிழ் நாட்டுடன் இணைந்துவிட வேண்டும் என்பதே அவர்களுடைய கோரிக்கை. அக்கோரிக்கையை மறுக்கும் கேரள அரசாங்கம், தமிழர்கள் பெரும்பான்மையினர் என்ற கணக்கை எதிர்க்கிறது.

" ஒரு பொது வாக்கெடுப்பின் மூலம் உண்மை இன்னதென்று உணர்ந்துகொள்ளலாம். இப்போதுள்ள சிக்கலில் தொடர்பு கொண்டுள்ள மூன்று பகுதியினரும் வெவ்வேறு கருத்துக் கொண்டிருக்கிருர்கள். கேரள அரசாங்கம் தமிழ்ப் பகுதிகளைக் கைவிடமாட்டேனென்கிறது. தமிழ் நாட்டு அரசாங்கம், அப்பகுதிகள் மொழி வழிக் கொள்கையின்படி இம்மாகாணத்திலேயே சேரவேண்டும் என்ற கருத்தை வற்புறுத்தியிருக்கின்றது. இந்தியப் பேரரசு இருமொழி, மும்மொழி, பன்மொழி மாகாணங்கள் அமைக்கவேண்டும் என்ற சொந்தக் கருத்தோடு நாட்டில் குழப்பத்தை உண்டாக்கி வருகிறது.

" இவற்றிலிருந்து நீங்குவதற்கும், ஒழுங்கான முடிவு காணுவதற்கும், பொது வாக்கெடுப்பு இன்றியமையாதது. பீர்மேடு, தேவிகுளம் முதலிய பகுதிகளில், பொதுத் தேர்தல்களில் தமிழ் நாட்டோடு இணைப்பை விரும்பிய தேர்வு நாடுவோர்களே வெற்றி பெற்றுள்ளனர். இந்தியப் பேரரசின் ஐயத்தையும், கேரள அரசாங்கத்தின் பிடிவாதத்தையும் நீக்குவதற்கு இதற்கென ஒரு தனி வாக்கெடுப்பு நடத்தினுல், மக்கள் கருத்து இன்னதென்று திட்டவட்டமாக விளக்கமுறும்.

—17-3-56 'தமிழ் நாடு' இதழ் தலையங்கத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.